(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
Case No.C.C.No.286/2023

DEPOSITION OF WITNESS FOR PW.5

| | | | |
|---|---|---|---|
| Name | B.MURUGAN | Caste | |
| Father / Husband Name | K.E.BOOPATHY | Occupation | SSI OF POLICE, MELPATTI P.S. |
| Village | | Religion | HINDU |
| Taluk | | Age | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.10.2023.

( 1- ம் எதிரி ஆஜர், 2, மற்றும் 3-ம் எதிரி ஆஜரில்லை, 317 கு.வி. மு.ச. மனு கொடுக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை

1. நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்குமுன் இந்த காவல்நிலையத்தில் கடந்த 2014 ம் வருடம் பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர் குப்பன் என்பவர் பணியாற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் அவரின் கையெழுத்துக்களை நான் காவல்நிலையத்தில் உள்ள கோப்புகளில் பார்த்துள்ளேன். மேலும் அவர் சார்பாகவும் இந்த வழக்கைப்பற்றி எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் நான் இந்த வழக்கிற்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.07.2014 ம் தேதி பகல் 12.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.குப்பன் நிலையப்பொறுப்பில் இருந்தபோது குடியாத்தம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலின்பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்த சம்பத் த/பெ.பெரியகுழந்தை என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தைப்பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 86/2014 பிரிவுகள் 341, 294 (பி), 323, 324, 506 (2) இதசபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேற்படி புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

3. மேலும் அன்றைய தினமே உதவி ஆய்வாளர் திரு.குப்பன் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சுரேஷ் மற்றும் ராஜேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை உதவி ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சிக்கையெழுத்து பெற்று மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4, வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்பு அதே பார்வை மகஜர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தான சுமார் 1 1/2 அடி நீளமுள்ள கத்தி ஒன்று ஆகியவற்றை சம்பவ இடத்திலிருந்து அவர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையெழுத்துக்களை பெற்றார். மேற்படி

கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 6 ஆகும்

4. பின்பு சாட்சிகள் 1 முதல் 8 வரை சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

5. பின்பு வழக்கின் எதிரிகளைத் தேடிவந்தநிலையில் இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் வேலூர் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் எதிர்பார்ப்பு பிணையம் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டார்கள். அத்துடன் இந்த வழக்குச்சொத்தான சுமார் 1 1/2 அடி நீளமுள்ள கத்தி ஒன்று படிவம் 95ல் முறைப்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.7 ஆகும்.

6. பின்பு பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை இன்றி கு.வி.மு,ச பிரிவு 294ன் கீழ்அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பின்னர் இவ்வழக்குச்சொத்துக்களான சுமார் 1 1/2 அடி நீளமுள்ள கத்தி ஒன்று ஆகியவை அ.சா.பொ.1 ஆகும். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளின்மீது 341, 294 (பி), 323, 324, 506 (2) இதசபடி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் புலன்விசாரணை அதிகாரி நான் இல்லையென்றால் சரிதான். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை எதிரிகள் புரியவில்லையென்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct

.

Sd/.M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyattam.